**18வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை-15.**

முன்னிலை : திரு.ஆர்.சுப்பிரமணியன், M.A., B.L., B.Ed.,D.L.L.,
18வது பெருநகர குற்றவியல் நடுவர்,
சைதாப்பேட்டை, சென்னை-15.

2023ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**தமிழுக்கு சுபகிருது ஆண்டு மார்கழி மாதம் 6ம் நாள்**

**C.C.No.949/2023**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்
இ3 தேனாம்பேட்டைகாவல் நிலையம்,
தேனாம்பேட்டை, சென்னை-06.
குற்ற எண்.1/2023
இந்தியதண்டனைச்சட்டப்பிரிவுகள்
294(b), 323 of IPC ... குற்றமுறையீட்டாளர்

//எதிராக//

1. கோகுலநாதன், ஆ/வ.32, த/பெ.குமார்,
2. பாலு, ஆ/வ.32, த/பெ.இளங்கோவன்,
3. மைக்கேல்ராஜ், ஆ/வ.32, த/பெ.ஜான்சன் ... எதிரிகள்

இவ்வழக்கானது என் முன்னிலையில் 22.12.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசுதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் நிலை இரண்டு அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.ரஜினிகாந்த் அவர்கள் ஆஜராகி முன்வைத்த இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

கடந்த 01.01.2023ம் தேதி நள்ளிரவு சுமார் 01.00 மணிக்கு இ-3 தேனாம்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சேவியர் ரோட்டில் உள்ள கிரௌண் பிளாசா ஹோட்டலுக்கு புத்தாண்டை கொண்டாட சென்ற புகார்தாரர் மதுபோதையில் ஹோட்டலின் போர்டிகோவில் புத்தாண்டை கொண்டாட வந்த மற்ற வாடிக்கையாளர்கள் DJமூலம் பாட்டு போட்டு நடனமாடிக் கொண்டிருந்ததை ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த 1 முதல் 3 எதிரிகள் புகார்தாரரின் மீது விழுந்துள்ளனர், அப்போது வாதி ஏன் மேலே வந்து விழறிங்க என்று கேட்ட போது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டடு அசிங்கமாக பேசியும் கைகலப்பு ஏற்பட்டு எதிரிகள் மூவரும் புகார்வாதியின் முகத்தில் கையால் குத்தி எட்டி உதைத்து கீழே தள்ளி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், புகார்வாதி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323ன் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி இ-3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

மேற்படி புகாரின் பேரில் திருவான்மியூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண்.1/2023 இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(பி), 323ன் கீழ் வழக்கு பதிவு செய்து வழக்கின் புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரிகள் 1. கோகுலநாதன், ஆ/வ.32, த/பெ.குமார், 2. பாலு, ஆ/வ.32, த/பெ.இளங்கோவன், 3. மைக்கேல்ராஜ், ஆ/வ.32, த/பெ.ஜான்சன்

ஆகிய எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 294(பி), 323ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதியறிக்கையினை இந்நீதிமன்றத்தால் கடந்த 07.03.2023 ல் பெறப்பட்டு மேற்படி இறுதியறிக்கை பரிசீலினை செய்யப்பட்டு எதிரிகளுக்கு எதிராக வழக்கேற்பு முதல் நோக்கு வழக்கு முகாந்திரம் இருந்தமையால், மேற்படி வழக்கினை இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்ய உத்தரவிடப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் தோன்றிய பொழுது இவ்வழக்கில் தொடர்புடைய அனைத்து ஆவணங்களின் நகல்களும் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப்பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய அவகாசம் அளிக்கப்பட்டு, அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து வினவிய போது எதிரி வழக்கை பொய் என்றும் அரசு தரப்பில் வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்கள்.

(4) எனவே இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவிய போது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று பதிலுரைத்தார். எனவே அரசுதரப்பு சாட்சிகள் விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

(5) இவ்வழக்கில் அரசுதரப்பில் 7 சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசுதரப்பு பட்டியலில் கண்ட சாட்சிகள் செய்யது அப்துல்காதர் என்பவர் அரசு தரப்பில் நீக்கறவு செய்யப்பட்டுள்ளார்கள். வழக்கின் புகார்வாதி அழகேந்திரநிதி அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1ன் மூலமாக புகாரிலுள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 2,3,4,5 அசா2,3,4,5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். காவல் உதவி ஆய்வாளர் திரு.முகமது இர்பான் அ.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அசா6ன் மூலமாக புகார்வாக்குமூலம் அ.சா.ஆ2, முதல்தகவலறிக்கை அசாஆ3, பார்வை மகஜர் அசாஆ4, மாதிரி வரைபடம் அசாஆ5, விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) புகார்வாதி அ.சா.1ன் மூலமாக புகாரிலுள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகவும், உதவி ஆய்வாளர் அ.சா.6ன் மூலமாக அசா6ன் மூலமாக புகார்வாக்குமூலம் அ.சா.ஆ2, முதல்தகவலறிக்கை அசாஆ3, பார்வை மகஜர் அசாஆ4, மாதிரி வரைபடம் அசாஆ5, விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ6 ஆக குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

7) <u>அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>-

அசா1 திரு.அழகேந்திரநிதி தனது சாட்சியத்தில் நான் தற்போது மதுரையில் டிரவல்ஸ் பிஸ்னஸ் நடத்தி வருவதாகவும், சுமார் ஒரு

வருடத்திற்கு முன்பாக புத்தாண்டை கொண்டாடுவதற்காக சென்னை, அடையாரில் உள்ள கிரௌவுன் பிளாசா என்ற ஹோட்டலுக்கு சென்றிருந்ததாகவும், அப்போது அங்கிருந்த அடையாளம் தெரியாத நபர்களுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும், நான் மதுவின் ஆதிக்கத்தில் இருந்ததால் என்னிடம் யார் பிரச்சினை செய்தார்கள் என்று தெரியாது என்றும், பின்னர் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்றதாகவும் இதுசம்பந்தமாக இ3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதென்றும், புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும், தற்போது நானும் எதிரிகளும் சமாதனமாகிவிட்டதாகவும், எனவே, எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா2 திரு.அசோக்குமார் தனது சாட்சியத்தில் நான் தற்போது கிரௌவுன் பிளாசா ஹோட்டலில் செக்கியூரிட்டி மேனேஜராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 01/01/2023ம் தேதி எங்கள் ஹோட்டலில் அ.சா.1 புத்தாண்டு கொண்டாட்டிற்கு வந்தபோது அவருக்கும் அடையாளம் தெரியாத நபர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாகவும், மற்றப்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாதென்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா3 திரு.மணியரசு தனது சாட்சியத்தில் நான் தற்போது கிரௌவுன் பிளாசா ஹோட்டலில் செக்கியூரிட்டியாக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 01/01/2023ம் தேதி எங்கள் ஹோட்டலில் அ.சா.1 புத்தாண்டு கொண்டாட்டிற்கு வந்தபோது அவருக்கும் அடையாளம் தெரியாத

நபர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாகவும், மற்றப்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாதென்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா4 திரு.செந்தில்குமார் தனது சாட்சியத்தில் நான் தற்போது கிரௌவுன் பிளாசா ஹோட்டலில் செக்கியூரிட்டியாக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 01/01/2023ம் தேதி எங்கள் ஹோட்டலில் அ.சா.1 புத்தாண்டு கொண்டாட்டிற்கு வந்தபோது அவருக்கும் அடையாளம் தெரியாத நபர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாகவும், மற்றப்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாதென்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா5 திரு.சந்தோஷ்குமார் தனது சாட்சியத்தில் தான் தற்போது கிரௌவுன் பிளாசா ஹோட்டலில் செக்கியூரிட்டியாக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 01/01/2023ம் தேதி எங்கள் ஹோட்டலில் அ.சா.1 புத்தாண்டு கொண்டாட்டிற்கு வந்தபோது அவருக்கும் அடையாளம் தெரியாத நபர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாகவும், மற்றப்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாதென்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அசா6 திரு.முகமது இர்பான் தனது சாட்சியத்தில் உதவி ஆய்வாளர் வீரம்மாள் பணியிலிருந்த போது ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அசா1 திரு.அழகேந்திரநிதி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று, புகாரின் அடிப்படையில் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்து, எதிரிகளை செய்து, புலன்

விசாரணை முடித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

8) அரசுதரப்பில் சாட்சிகள் விசாரணை செய்து முடிக்கப்பட்டபின் அரசுதரப்பு சாட்சிகளிடமிருந்து எதிரிக்கு பாதகமான குற்றச் சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் குற்றவியல் விசாரணை முறைச் சட்டப்பிரிவு 313 (1) (ஆ)ன் கீழ் விளக்கிக் கூறி வினவிய போது எதிரி அவற்றை பொய் என மறுத்துரைத்தார். எனவே இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைக்கு வழிவகை செய்யப்பட்டது.

9) அரசு தரப்பு வழக்கறிஞர் தோன்றி வாதிட்டபோது குற்ற எண்.1/2023 இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(பி), 323ன் கீழான வழக்கின் விசாரணையின் போது வழக்கின் புகார்வாதியும் எதிரியும் சமாதானம் ஆகிவிட்டதால் இருதரப்பிலும் கு.வி.மு.ச 320ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனுவானது இந்நீதிமன்றத்தால் ஏற்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டதால் ஆவணங்கள் அடிப்படையில் எதிரிகளின் குற்றச்சாட்டுக்கள் உண்மை என தெரிய வருகிறது எனவும் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் எதிரி தரப்பில் ஒப்புக்கொண்டதாகவே அமைந்துள்ள நிலையில் எதிரிக்கு உயர்ந்தபட்ச தண்டனை அளிக்கவேண்டுமென வாதிட்டு முடித்தார்.

10) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தோன்றி வாதிட்ட போது இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தம் கிடையாது என்றும், புகார்வாதியும் எதிரியும் இவ்வழக்கில் சமரசமாக போய்விட்டதால் சமரச மனுவினை ஏற்று எதிரி திருந்தி வாழ்வதற்கு வாய்ப்பளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டு முடித்தார்.

11) இருதரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்ட நிலையில் இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களால் முன்வைக்கப்பட்ட வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் இருந்து இவ்வழக்கில் கண்டறியப்பட வேண்டிய சங்கதி யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்க்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

12) அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்வதற்கு 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 6 சான்றாவணங்களும், குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பில் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிய போதிலும், சான்றாவணங்கள் அடிப்படையில் புலனாய்வு அதிகாரியின் சாட்சியத்தை கொண்டு எதிரியை தண்டிக்க வேண்டுமாய் வாதிட்டு முடித்தார்.

13) அரசு தரப்பு வழக்கானது கடந்த 01.01.2023ம் தேதி நள்ளிரவு சுமார் 01.00 மணிக்கு இ-3 தேனாம்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சேவியர் ரோட்டில் உள்ள கிரெளண் பிளாசா

ஹோட்டலுக்கு புத்தாண்டை கொண்டாட சென்ற புகார்தாரர் மதுபோதையில் ஹோட்டலின் போர்டிகோவில் புத்தாண்டை கொண்டாட வந்த மற்ற வாடிக்கையாளர்கள் DJமூலம் பாட்டு போட்டு நடனமாடிக் கொண்டிருந்ததை ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த 1 முதல் 3 எதிரிகள் புகார்தாரரின் மீது விழுந்துள்ளனர், அப்போது வாதி ஏன் மேலே வந்து விழறிங்க என்று கேட்ட போது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டடு அசிங்கமாக பேசியும் கைகலப்பு ஏற்பட்டு எதிரிகள் மூவரும் புகார்வாதியின் முகத்தில் கையால் குத்தி எட்டி உதைத்து கீழே தள்ளி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், புகார்வாதி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323ன் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி இ-3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

14) அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிருபணம் செய்வதற்கு 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பில் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது. எதிரிகளிடம் குவிமுச 313 (1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி தனது தரப்பில் சாட்சிகள் உண்டு என்று விசாரிக்க கோரியவர் தமது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தானாகவே முடித்துக் கொண்டார்கள். இரு தரப்பு வழக்கும் முடிக்கப்பட்டது.

15) அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பார்க்கும் போது இவ்வழக்கில் புகார்வாதியான திரு.அழகேந்திரநிதி அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் ஒரு

வருடத்திற்கு முன்பாக புத்தாண்டை கொண்டாடுவதற்காக சென்னை, அடையாரில் உள்ள கிரௌவுன் பிளாசா என்ற ஹோட்டலுக்கு சென்றிருந்ததாகவும், அப்போது அங்கிருந்த அடையாளம் தெரியாத நபர்களுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும், நான் மதுவின் ஆதிக்கத்தில் இருந்ததால் என்னிடம் யார் பிரச்சினை செய்தார்கள் என்று தெரியாது என்றும், பின்னர் ராய்பேட்டை அரசு மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்றதாகவும் இதுசம்பந்தமாக இ3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதென்றும், புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும், தற்போது நானும் எதிரிகளும் சமாதனமாகிவிட்டதாகவும், எனவே, எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

16) மேலும் சம்பவத்தை கண்ணால் கண்டாதாக கூறப்படும் பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 3 ஆகியோர் அசா2 மற்றும் அ.சா.3ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். மேலும் பார்வை மகஜர் சாட்சியாக அரசுதரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட பட்டியல் சாட்சிகள் 4 மற்றும் 5 ஆகியோர் அசா4 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். அசா.2 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் தங்களது சாட்சியத்தில் தங்களது சாட்சியத்தில் கடந்த 01/01/2023ம் தேதி எங்கள் ஹோட்டலில் அ.சா.1 புத்தாண்டு கொண்டாட்டிற்கு வந்தபோது அவருக்கும் அடையாளம் தெரியாத நபர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாகவும், மற்றப்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாதென்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளனர்.

17) மேற்படி அசா1 முதல் 5 வரையிலான சாட்சிகள் இவ்வாறாக சாட்சியமளித்துள்ள நிலையிலும், பாதிக்கப்பட்ட நபரான அசா1 தனது சாட்சியத்தில் யார் தாக்கினார் எவ்வாறு தாக்கினார்கள் என்றும், அடையாளம் தெரியாத நபர் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையிலும், கண்ணுற்ற சாட்சிகளும், பார்வை மகஜர் சாட்சிகளும் எதிரிகளின் அடையாளம் குறித்து அசா1யை ஒத்து சாட்சியமளித்துள்ள நிலையிலும் அரசுதரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட குற்றச் செயலில் அரசுதரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட எதிரிகள் தான் ஈடுபட்டார்கள் என முடிவு செய்ய இயலாது

18) மேலும் மேற்படி அசா1 முதல் 5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் தற்போது நாங்களும், எதிரிகளும் சமாதனம் ஆகிவிட்டோம். எதிரிகள் மீது மேல்நடவடிக்கை எடுக்க தேவையில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே, மேற்படி அசா1 முதுல் 5 சாட்சிகளை அரசுதரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவித்து குறுக்கு விசாரணை செய்த போதிலும் அரசுதரப்பிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. எனவே இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிருபணம் செய்யும் விதமாக வேறு எந்த சாட்சிகளும் விசாரணை செய்யப்படவில்லை.

19) அரசுதரப்பில் 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் பட்டியலிட்டிருந்த போதிலும் 6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு பட்டியல் சாட்சி 6 அரசுதரப்பில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. அரசு

தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை கண்ணுற்ற பொழுது அசா1 அழகேந்திரநிதி புகார்தாரரான அவர் தனது சாட்சியத்தில் அடையாளம் தெரியாத நபர்களுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும், நான் மதுவின் ஆதிக்கத்தில் இருந்ததால் என்னிடம் யார் பிரச்சினை செய்தார்கள் என்று தெரியாது என்றும், தற்போது நானும் எதிரிகளும் சமாதனமாகிவிட்டதாகவும், எனவே, எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் சாட்சியமளித்துள்ளார். அசா2 தனது சாட்சியத்தில் கடந்த 01/01/2023ம் தேதி எங்கள் ஹோட்டலில் அ.சா.1 புத்தாண்டு கொண்டாட்டிற்கு வந்தபோது அவருக்கும் அடையாளம் தெரியாத நபர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாகவும், மற்றப்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாதென்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அசா3 மணியரசு, அசா4 செந்தில்குமார், அசா5சந்தோஷ்குமார் அசா2யை ஒத்து சாட்சியமளித்துள்ளனர். எனவே, மேற்படி சாட்சிகளை பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளது.

20) மேற்கண்ட சூழ்நிலையில் அ.சா.1 புகார்வாதி எதிரிக்கு எதிராக எத்தகைய சாட்சியமும் அளிக்காத நிலையில், அசா2,3,4,5ம் அசா1க்கு ஒத்து சாட்சியமளித்துள்ள நிலையிலும் எதிரியை குற்றவாளி என்று தீர்மானிக்க இயலாத நிலையில், எதிரி மீதான குற்றசாட்டுக்கள் நிரூபணம் செய்வதற்கு அரசு தரப்பில் போதுமான சாட்சிகளோ சான்றாவணங்களோ எதிரிகளுக்கு எதிராக அமையாத நிலையில் அரசு தரப்பில் எதிரி மீதான இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 294(பி), 323ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

21) மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையில் எதிரி மீதான இந்திய தண்டனைச்சட்டப்பிரிவுகள் 294(பி), 323ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தகுந்த சாட்சிகளை கொண்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

22) இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் செய்யப்படவில்லை

23) முடிவாக இவ்வழக்கின் எதிரி இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 294(பி), 323ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்வு செய்து எதிரியை குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப்பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

//இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2023ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ஆம் நாள் நீதிமன்ற அவையின் பொதுவில் பகரப்பட்டது.//

R SUBRAMANIAN

Digitally signed by R SUBRAMANIAN
Date: 2023.12.22 18:03:45 +0530

18வது பெருநகர குற்றவியல் நடுவர்,
சைதாப்பேட்டை சென்னை-15.

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1. திரு.அழகேந்திரநிதி
அசா2 திரு.அசோக்குமார்.
அசா3 திரு.மணியரசு.

அசா4 திரு.செந்தில்குமார்.
அசா5 திரு.சந்தோஷ்குமார்.
அசா6 திரு.முகமது இர்பான் காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.சா.ஆ.1 புகாரிலுள்ள அசா1ன் கையெழுத்து
அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம்
அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.4 பார்வை மகஜர்
அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.6 காயச்சான்றிதழ்.

எதிரி தரப்பு சாட்சிகள் = இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் = இல்லை

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள் = இல்லை

R SUBRAMANIAN
Digitally signed by R SUBRAMANIAN
Date: 2023.12.22 18:03:40 +0530

18வது பெருநகர குற்றவியல் நடுவர்,
சைதாப்பேட்டை சென்னை-15

**<u>பின் இணைப்பு</u>**

1. எந்த ஒரு சாட்சிகளும் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.
2. தீர்ப்புநகல் மாண்புமிகு தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.